IN THE COURT OF I ADDITIONAL SPECIAL JUDGE,
UNDER NDPS ACT, CHENNAI-104.
(Chapter XXIII code of Criminal Procedure)

**C.C. NO.104/2022**

DEPOSITION OF WITNESS FOR P.W.3

NAME : Tmt. L.C.Amutha

FATHER/HUSBAND/NAME :

OCCUPATION :

AGE :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the date: 19.09.2025.

Signature of the Witness

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது சென்னை தமிழ்நாடு தடய அறிவியல் துறையில் துணை இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.03.2022 அன்று இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வழக்கு பொருளான முத்திரையிடப்பட்ட கிளாத்லைன் பார்சல் ஒன்று முதன்மை சிறப்பு நீதிமன்றத்திலிருந்து முதல் நிலைக் காவலர் திரு.அரவிந்த் என்பவர் மூலம் நீதிமன்ற கடிதம் வாயிலாக கிடைக்கப்பெற்றது. முத்திரைகள் சரியாகவும் முழுமையாகவும் இருந்தன. முத்திரையிடப்பட்ட கிளாத்லைன் பார்சலில் இருந்த பாலீத்தின் உறையில் 5 ஸ்டாம்ப் கொண்ட அட்டை இருந்தது. அவற்றின் நிகர எடை 0.085 கிராம் மொத்தமாக இருந்தது. அவற்றை i) Fluorescence, ii) Chemical Tests and iii) Fourier Transform Infrared Spectrometry ஆகிய முறைகளில் பகுப்பபாய்வு செய்ததில் அவற்றில் Lysergide என்ற மனமயக்கும் பொருள் இருப்பது கண்டறியப்பட்டது. இதற்கான 26.04.2022 தேதியிட்ட ஆய்வறிக்கையை வழக்கு சொத்து அனுப்பப்பட்ட காலி கவருடன் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. பகுப்பாய்வு அறிக்கை **அ.சா.ஆ.10**. என்னை இது சம்மந்தமாக ஆய்வாளர் விசாரித்தார்.

I Addl.Spl.Judge

<u>**குறுக்குவிசாரணை—**</u>

நீதிமன்ற முத்திரையிடப்பட்ட கவரில் தான் வழக்கு சொத்து பெறப்பட்டது. 22.04.2022 முதல் 25.04.2022 வரை ஆய்வகத்தில் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. வழக்கு சொத்து ஆய்வகத்தில் பெறப்பட்டதிலிருந்து ஒரு மாதம் கழித்து தான் பகுப்பாய்வு செய்யப்பட்டது. இடைப்பட்ட காலத்தில் சொத்தில் வேதியியல் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பில்லை. ஆய்வாகத்தால் பெறப்பட்ட முழுமையான வழக்கு சொத்தும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. நான் மேற்கொண்ட மூன்று ஆய்வுகளின் முடிவுகளையும் தனித்தனியாக அறிக்கையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் மூன்று ஆய்வுகளின் முடிவுகளிலும் வழக்கு சொத்தின் Lysergide என்ற மனமயக்கும் பொருள் இருப்பது கண்டறியப்பட்டது. ஆய்வகத்தில் பெறப்பட்ட வழக்கு சொத்தில் நீதிமன்ற முத்திரை மட்டும் தான் இருந்தது.

**மறுவிசாரணை இல்லை.**

**Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the Accused and admitted by the Witness in correct.**

**I Addl. Spl. Judge**

**Under NDPS Act, Chennai -104.**

I Addl.Spl.Judge